## தெங்கு அபிவிருத்தி அதிகார சபை – 2017

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க, தெங்கு அபிவருத்தி அதிகாரச் சட்டத்தின் 43 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 7 இன் 53 ஆம் பந்தியின் பிரகாரம் மீள் மதிப்புச் செய்யப்பட்ட சொத்துக்களின் இயலளவுப் பெறுமதி குறைவடைதலை அச் சொத்துக்கள் வகுதி சம்பந்தமான மீள் மதிப்பு மிகைக்கு எதிராக நேரடியாக வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும் துன்கந்தாவ தோட்டத்தின் கட்டிடம் சம்பந்தமான ரூபா 8,673,540 தொகையான மீள்மதிப்பு மிகைக்கு எதிராக வரவு வைப்பதற்குப் பதிலாக ஆண்டிற்கான இலாபத்திற்கு எதிராகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,429,422 தொகையான குளிரூட்டி இயந்திரமும் மின்விசிறிகளும் அலுவலக தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் காட்டப்படுவதற்கு பதிலாக கட்டிடங்களின் கீழ் காட்டப்பட்டதன் காரணமாக கட்டிடங்களின் மீதி அப்பெறுமதியாலும் கட்டிடப் பெறுமானத் தேய்வு ரூபா 489,185 தொகையால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஆ) தென்னை ஆராய்ச்சி சபைக்கு குத்தகைக்கு வழங்கி மீண்டும் அதிகார சபையால் 2016 ஆம் ஆண்டின் போது பொறுப்பேற்கப்பட்ட ‘‘துன்கந்தாவ தோட்டத்தின்’’ தும்பு ஆலைக்குச் சொந்தமான இயந்திரங்கள், கணனி, அலுவலக தளபாடங்களும் உபகரணங்களும் ஆகிய 164 விடயங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீள் மதிப்பீட்டு ஒதுக்க கணக்கு மீதி ரூபா 107,190,964 ஆக இருந்த போதிலும் மோட்டார் வாகனங்களின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீள் மதிப்பீட்டுப் பெறுமதியாகிய ரூபா 64,975,000 பணம் மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தின் இறுதி மீதியாக செம்மையாக்கி அதன் வித்தியாசமாகிய ரூபா 42,215,964 நிதி செயலாற்றல் கூற்றிற்கு மாற்றம் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்கான இலாபம் அத் தொகையால் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கப்ருக ஐய இசுரு கடன் திட்டத்திற்குரிய சலுகை வட்டிச் செலவாகிய ரூபா 2,745,383 தொகை மீளாய்வாண்டிற்கான செலவாக கணக்கீடு செய்யப்படாது ஒரு கடன்பபட்டோராக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருந்தன. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான வட்டிச் செலவும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான கடன்பட்டோர் மீதியும் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

**2.2.3 தொங்கல் கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் 2016 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட ரூபா 1,871,776 தொகையான தொங்கல் கணக்கின் செலவு மீதியை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை**

பின்வரும் கணக்கு விடயங்கள் சம்பந்தமாக அவற்றிற்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறமதி<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| (i) | துண்டுத் தேங்காய் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சேவைகளுக்காக (Service rendered to D.C.Millers) பணத்தை பெற்றுக்கொள்ளல் | 2,000,913 | பற்றுச்சீட்டு |
| (ii) | கடனுக்கு விற்பனை செய்தல் | 3,136,537 | விலைப்பட்டியல் |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செஸ் நிதியத்தின் கீழ் காணப்பட்ட கடன்பட்டோர்களில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட ரூபா 180,485 மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒரு தனியார் கம்பனிக்கு 1984, 2002 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட கடன் பணத்தில் மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 31,550,000 அறவிட வேண்டிக் காணப்பட்டது. கடனுக்கான வட்டியாகிய ரூபா 40,116,090 தொகை நிதிக்கூற்றுக்களில் பெற வேண்டிய மீதியாகக் காட்டப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் நிதி விளைவுகள் ரூபா 140,413,563 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 96,418,633 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 43,994,930 மிகையாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்க வருமானம் ரூபா 14,310,017 ஆல் குறைவடைந்திருந்தும், ஏனைய வருமானம் ரூபா 133,833,931 ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் ஊழியர் ஊதியச் செலவு ரூபா 20,020,168 ஆலும் பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செலவு ரூபா 29,292,265 ஆல் அதிகரித்தமையும் மேற்கூறிய முன்னேற்றத்திற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளுக்கான நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 36,419,413 தொகையான மிகை 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 15,457,175 வரை வீழ்ச்சியடைந்திருந்தும் 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 140,413,563 வரை முன்னேற்றமடைந்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், நடைமுறையற்ற சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு, அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரி என்பவற்றை மீண்டும் செம்மையாக்கிய போது 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 118,356,413 தொகையான பங்களிப்பு 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 116,614,175 வரை வீழ்ச்சியடைந்திருந்தும் 2015 ஆம் ஆண்டிலிருந்து முரண்களுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 309,001,563 வரை முன்னேற்றமடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் மொத்த வருமானத்தில் 39 சதவீதம் திறைசேரி மானியங்களை உள்ளடக்கியிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய வருமானம் 70 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் வட்டி வருமானம், ஆய்வுகூட வருமானம், பரிசோதனை மற்றும் செயன்முறைக் கட்டணம் என்பன அதிகரித்துச் செல்லல் இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நடைமுறை விகிதம் 1:18 இலிருந்து 1:8 வரை வீழ்ச்சியடைந்திருந்தது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சட்ட சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகார சபையின் ஒரு உத்தியோகத்தரால் மீளாய்வாண்டின் போது தொழிலில் பதவியுயர்வு தொடர்பான அடிப்படை உரிமை மீறல் சம்பந்தமாக அதிகார சபைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அதிகார சபையின் முன்னாள் கணக்காளர் ஒருவர் செய்த பண மோசடி தொடர்பாக ரூபா 2,000,000 இற்காக மேல் நீதிமன்றத்தால் ஒரு வழக்கு விசாரிக்கப்பட்டு வந்ததுடன் ரூபா 1,300,000 தொடர்பான மோசடி புலனாய்வு பிரிவால் விசாரிக்கப்பட்டு வந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயல் நடவடிக்கையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகார சபையின் செயற்திட்ட பிரிவால் அமுல்ப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த 5 தொழில்நுட்ப பரிமாற்று நிலையங்களைத் தோற்றுவிப்பதற்கு உதவியளித்தலும் சிறந்த உற்பத்திகளை மேற்கொள்ளுவதற்குத் தேவையான 300 உபகரணங்களைப்

பெற்றுக்கொள்வதற்கும் உற்பத்தி தரவுகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் வழங்குவதற்கான தரவு முறைமையைத் தயாரிக்கும் குறிக்கோளுடன் ரூபா 5.3 மில்லியன் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தும் அதிகாரசபையால் மீளாய்வாண்டின் போது அச்செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெங்கு முக்கோண வலயத்திற்கு வெளியே தென்னை சார்ந்த பெறுமதியை அதிகரித்து உற்பத்தியை மேற்கொள்வதற்கு உதவியளிப்பதற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் ரூபா 3.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அவற்றில் ரூபா 0.54 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

---------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேங்காய் பால், தேங்காய் பால் மா, தேங்காய் கிறீம் என்பவற்றை பாவனையாளர்களுக்கு மத்தியில் பிரபல்யப்படுத்தும் குறிக்கோளுடன் நிகழ்ச்சித்திட்டங்களை பிரசித்தப்படுத்துவதற்காக அதிகாரசபையால் 2014 ஆம் ஆண்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கும் ரூபாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கும் செலுத்தப்பட்ட பணத்தில் பிரசித்தப்படுத்தப்படாத நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அந் நிறுவனங்களிடமிருந்து முறையே ரூபா 136,970 மற்றும் ரூபா 7,060,032 அறவிட வேண்டியிருந்த போதிலும் அப்பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது அதற்குப் பதிலாக வேறு நிகழ்ச்சித்திட்டங்களை பிரச்சாரம் செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை முடியாதிருந்தது.

(ஆ) நிறுவனத்தின் பதவியணியினருக்காக சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலை காப்புறுதிக்கான பெறுகை நடவடிக்கைகளை 2 மாதங்கள் 19 நாட்கள் தாமமித்ததன் காரணமாக அக்காலத்தில் உத்தியோகத்தர்களின் வதிவிட சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் மருத்துவ விலைப்பட்டியல்களை மீளளிப்புச் செய்வதற்காக முறையே ரூபா 293,677 மற்றும் ரூபா 308,823 அதிகார சபையால் செலுத்த வேண்டியிருந்தது.

(இ) இலங்கை தேங்காய் உற்பத்திகளை ஏற்றுமதி செய்யும் Ceylon Coconut வியாபாரக் குறியைப் பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் அதிகார சபைக்கு முடியாதிருந்தது.

## 4.3 ஆளணி நிர்வாகம்

-----------------------------------

மீளாய்வாண்டின் இறுதியளவில் அதிகார சபையின் பதவியணியினர்களில் பணிப்பாளர், (தயாரிப்பு அபிவிருத்தி), பணிப்பாளர் சந்தைப்படுத்தல் (சர்வதேசம்), சட்ட உத்தியோகத்தர் தரக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் ஆகிய பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தும் உரிய பதவிகளுக்கு தகைமை பெற்ற உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளுதல்

2007 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜி/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்காக தெங்கு அபிவிருத்தி அதிகார சபையால் தமது நோக்கெல்லைக்கு உட்பட்ட செயற்பாடுகள் சம்பந்தமாக எவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக பரிசோதனை செய்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சபையால் இனங்காணப்பட்ட செயற்பாடுகள் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அச்செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதி ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஏதாவது செயற்பாட்டின் சரியான செயலாற்றலை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படை ஒன்று காணப்படுதல் அத்தியாவசியமான போதிலும் நிறுவனத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்காக சரியான தரவு அடிப்படை ஒன்றினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 6.1 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

ஆய்வு கூடத்தை புத்துருவாக்கும் நடவடிக்கைகளுக்காக 2017 செப்தெம்பர் 25 ஆந் திகதி ஒரு ஒப்பந்தகாரருடன் ஏற்கடுத்திய ரூபா 17,105.455 தொகையான உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நிர்மாணங்கள் 2017 திசெம்பர் 25 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 30 ஆந் திகதி வரை உரிய நிர்மாணங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 17,950,802 தொகையான ஆய்வுகூட உபகரணங்களையும் உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தமுடியாதிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகார சபையின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) கணக்கீடு | I | நிலையான சொத்துக்களை சரியாக வகைப்படுத்தி கணக்கீடு செய்யப்படாமை |
| | II | நாட்குறிப்பு பதிவுகளின் மூலம் செம்மையாக்கல்களை மேற்கொள்ளும் போது பொறுப்பான உத்தியோகத்தர்களின் சிபார்சின் பிரகாரம் இடம் பெற்றிருக்காமை. |
| (ஆ) மனித வளங்கள் முகாமைத்துவம் | | பிரதான பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்காக தேவையான ஆட்சேர்ப்புக்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) பாதீட்டுக் கட்டுப்பாடு | | பாதீடு செய்யப்பட்ட பணம் உரிய குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக ஈடுபடுத்தப்படாமை. |
| (ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம் | | கோட்டை டியூர் வீதியிலுள்ள அலுவலகக் கட்டிடத்திற்கு தீயினால் ஏற்பட்ட சேதங்கள் சம்பந்தமான அறிக்கையை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையும் அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 3,312,462 கிரயமான அலுவலக உபகரணங்கள் மற்றும் கணனி துணைக் கருவிகளை ஏடுகளிலிருந்து நீக்குதலும் |